TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029440

1. District மாவட்டம் : காஞ்சிபுரம் PS: காவல்நிலையம் Vigilance & Anti-Corruption. Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 1/18 Date: நாள் 05.01.18.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act. 1988. Sections பிரிவுகள்: 12, 13(2) r/w. 13(1)(d) of The PC Act. 1988.
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Cr.p.C. Sections பிரிவுகள்: 102.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 04.01.18 Date to : நாள் வரை -
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.30 hrs Time to : நேரம் வரை 00.30 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.01.18 Time : நேரம் 16.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.01.18. Time : நேரம் 16.30 hrs.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 55 km. வடமேற்கு.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திருத்தணி, RTO சோதனைச்சாவடி திருவள்ளூர் மாவட்டம். சுமார் 55 km.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : திருவள்ளூர் Dist.
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. R. லக்ஷ்மி (b) Father's/ Husband's Name : Tr. மனோகரன்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 43 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட திணை ஆய்வுக் குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் காஞ்சிபுரம். மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) திருமதி. ஜெயமோகனா, MVI (NT). (2) Tr. சீனிவாசன், உதவியாளர். (3) Tr. நாகப்பன், அலுவலக உதவியாளர். மேலும் திருத்தணி RTO சோதனை சாவடி - தனிநபர்கள் (4) வெங்கடேசன் s/o. தணிகாசலம் (5) பிரவீண் குமார் s/o. கண்ணுசாமி, (6) Tr. நாகராஜன் s/o. ராகவ ரெட்டி (மேலும் தனி நபர்கள்.)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தகவல் கொடுப்பவரால் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : கணக்கில் வராத பணம் Rs.28,820/= (ரூபாய் இருபத்தியெட்டாயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நான் இன்று 05.01.2018 ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு நிலைய அலுவலர் இருந்த போது காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் துணை ஆய்வுக் குழு அலுவலர் திருமதி.க.லட்சுமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விபரம் பின் வருமாறு:-
— Seperate Sheet attached vide Pg. No.3.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 05/01/18.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் D. சிவசாமி
Rank: நிலை ......................No. எண் .........
காவல் ஆய்வாளர்,
V & AC,
காஞ்சிபுரம்.

**Kancheepuram V&AC Cr.No.1/AC/208/KM, FIR contents continues for Column 12:**

பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, காஞ்சிபுரம் ந.க.எண் 19/2018/ஆ. நாள்: 05.01.2018 திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் அமைந்துள்ள போக்குவரத்து துறை சோதனைச் சாவடியில் வாகனங்களின் ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடம் இருந்து தனி நபர்கள் துணையுடன் லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், 04.01.2018 ஆம் தேதி மாலை 16.30 மணி முதல் 05.01.2018 ஆம் தேதி அதிகாலை 00.30 மணி வரை சென்னை நகரப்பிரிவு-5, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஜெ.உதயசங்கர், காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.T.சிவபாதசேகரன் மற்றும் அவர்களது பார்ட்டி சகிதம் கூட்டாய்வினை மேற்கொண்டபோது, சோதனை சாவடி அலுவலகத்தில், திருமதி.ஜெயமேகலா, மோட்டார் வாகன ஆய்வாளர், (தொழில் நுட்பம் இல்லாத), திரு.பா.சீனிவாசன், உதவியாளர் மற்றும் திரு.ஆ.நாகப்பன், அலுவலக உதவியாளர், திருத்தணி சோதனை சாவடி, திருவள்ளூர் மாவட்டம் என்பவர்கள் பணியில் ஆஜரில் இருந்தனர். அவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டு, கணக்கு பார்த்தபோது, கணக்கில் வராத பணம் ரூ.28,820/- (2000x3, 500x41, 100x20, 50x4, 20x3, 10x6) அதிகப்படியாக இருந்ததற்கான முகாந்திரம் எதுவும் கூறாததாலும், மேலும் திரு.வெங்கடேசன், த/பெ.தணிகாசலம், திரு.பிரவீண்குமார், த/பெ.முனுசாமி மற்றும் திரு.தசரதன், த/பெ.ராகவ ரெட்டி ஆகிய மூன்று தனிநபர்கள் உதவியாக இருந்தனர். கணக்கில் வராத பணம் ரூ.28,820/- பற்றி விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் எதுவும் கூறாததால், அப்பணத்தை மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் லஞ்சமாக பெற்ற பணம் என கருதி கைப்பற்றப்பட்டது. அப்பணத்தையும், ஆஜரில் இருந்தவர்களிடம் என்னால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களையும், எனது செயல்முறையுடன் சேர்த்து தங்களிடம் மேல்நடவடிக்கை எடுக்க ஒப்படைக்கிறேன். இந்நிகழ்வின் தங்கள் துறை மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் முடிவினை இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்த கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது ஒப்பம் xxx ஆர்.இலட்சுமி 05.01.2018 மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் இணைப்பு 1. கைப்பற்றப்பட்ட பணம் ரூ.28,820/-, 2. திடீர் ஆய்வின் செயல்முறைகள், 3. ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர்களிடம் (6 நபர்கள்), என்னால் பெறப்பட்ட வாக்குமூலங்களின் நகல்கள்.

4. பணப்பதிவேடு, வருகைப்பதிவேடு, வருகைப்பவேட்டின் சுருக்கப்பேதிவேடு, அலுவலர் பணம் கையிருப்பு பதிவேடு, ரசீது எண் L9377474, L9377620, Account Statement Computer Print dt.

**Kancheepuram V&AC Cr.No.1/AC/208/KM, FIR contents continues for Column 12:**

04.01.2018 at 16:48:49 hrs. ஆகியவற்றின் நகல்கள் என வழங்கப்பட்ட புகார் மனுவில் காவல் துணை கண்காணிப்பாளர். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பத்துறை. காஞ்சிபுரம் அவர்கள் வழக்கு பதிவு செய்ய பிறப்பித்த உத்திரவுடன் திடீர் ஆய்வின் செயல்முறை விவரம் வருமாறு திருவள்ளுர் மாவட்டம், திருத்தணி சோதனைச் சாவடி மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத) அலுவலகத்தில் வாகன ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடம் லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு-5, சென்னை-16 தலைமையில் மோட்டார் வாகன ஆய்வாளர், திருத்தணி சோதனைச்சாவடி அலுவலகத்தில் (பொன்பாடி) இன்று 04.01.2018-ந் தேதி மாலை சுமார் 16.30 மணியளவில் மேற்க்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| துறைத் தலைமை அலுவலர். | போக்குவரத்து ஆணையர்<br>சேப்பாக்கம், சென்னை-05 |
| ஆய்வின்போது கலந்து கொண்டவர்கள். | 1. திருமதி.இரா.லட்சுமி,<br>காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்<br>மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு),<br>காஞ்சிபுரம்.<br>2. திரு.J.உதயசங்கர்<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை<br>சென்னை-நகரப் பிரிவு-5, சென்னை-16.<br>3. திரு.T,சிவபாதசேகரன்<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம்.<br>4. திரு.V.கணேசன்,<br>காவல் ஆய்வாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம். |

**Kancheepuram V&AC Cr.No.1/AC/208/KM, FIR contents continues for Column 12:**

5. திருமதி.D,சிவகாமி, காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம்

6. திருமதி.A.நீலவேணி,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை
சென்னை-நகரப் பிரிவு-5, சென்னை-16.

மேற்படி திடீர் கூட்டாய்வு மேற்கொண்டபோது, மேற்படி சோதனைச் சாவடியில் திருமதி.G.ஜெயமேகலா, வயது-54 க/பெ காணமணி (லேட்), B7, விமல் எம்ரால்ட் பிளாட், வளசரவாக்கம், சென்னை-87 மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத), அவர்களும், திரு.B.சீனிவாசன், வயது 52 த/பெ. பாலகிருஷ்ணன், எண்.33, ஜெயபாலன் தெரு, அசோக் நகர், சென்னை-83 உதவியாளர் மற்றும் தனிநபர்கள் 1.திரு.T.வெங்கடேசன், ஆ/50, த/பெ தணிகாச்சலம், 5-வது தெரு, தாசுகுப்பம், சத்தியவேடு மண்டலம், ஆந்திரா மாநிலம் (ஊத்துக்கோட்டை திருவள்ளூர் மாவட்டம் அருகே), 2.திரு.எம்.பிரவீன்குமார், ஆ/32, த/பெ முனுசாமி, ராமசாமி நகர், கைனூர், அரக்கோணம் தாலுக்கா, வேலூர் மாவட்டம், 3.திரு.தசரதன், ஆ/44, த/பெ ராகவாரெட்டி, எண்.1/54A, மேட்டுத்தெரு, ஒதப்பை, ஊத்துக்கோட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் ஆகியோர்கள் பணியிலிருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலரான நான், மேற்படி அனைத்து அலுவலர்களுக்கு என்னையும் மற்றும் ஆய்வுக் குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து, பின் ஆய்வுக் குழுவில் உள்ள அனைவரும் தங்களது உடமைகளை சுயசோதனை செய்துகாட்டி, அலுவலக சோதனையை ஆரம்பித்தோம். பிறகு, மேற்படி செக்போஸ்ட்டின் Account Statement கணினி பிரிண்ட் MVI அவர்களிடம் கேட்டுப் பெற்று அதில் அவரும் நானும் கையொப்பமிட்டு விசாரணைக்காக பெற்றுக்கொண்டேன். மேற்படி Account Statement ஐ பார்வையிட்டதில் ரசீது எண்.9377474 முதல் 9377620 வரை 16.48.49 மணி நிலவரப்படி பணமாக வசூல் செய்த தொகை ரூ.1,70,720/-

**Kancheepuram V&AC Cr.No.1/AC/208/KM, FIR contents continues for Column 12:**

ஆகும். Draft மூலம் வசூலான தொகை ரூ.45,000/- ஆகும். பிறகு, மேற்படி MVI திருமதி.G.ஜெயமேகலா அவர்கள் அமர்ந்திருந்த நாற்காலிக்கு எதிரே உள்ள மரமேஜையின் வலதுபுற டிராயரில் சோதனையிட அதில் மேல் டிராயரில் ரூ.170720/- இருந்தது. மேற்படி பணம் குறித்து, மேற்படி அலுவலர்களிடம் விளக்கம் கேட்க, இன்று 04.01.2018-ந்தேதி 08.00 மணிமுதல் 16.30 மணி வரையில் ரசீது எண்.L9377474 முதல் L9377620 ன்படி வசூல் செய்த தொகை என விளக்கம் அளித்தனர். ஆவணங்களை சரிபார்க்க சரியாக இருந்தது. மேற்படி பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி மேல் டிராயருக்கு கீழ் உள்ள டிராயரை திறந்து சோதனையிட அதில் ரூ.15,550/- (500X31, 50X1) இருந்தது, மேற்படி பணம் குறித்து கேட்க உரிய விளக்கம் அளிக்காததால் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி மேசையின் மீது ரூ.600/- (100X6) இருந்தது, மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்க உரிய விளக்கம் அளிக்காததால் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளரின் பழுப்புநிற கைப்பையை எடுத்து சோதனைக்கு திறந்து காண்பிக்கக் கூற அவரும் காண்பித்தார் அதில் ரூ.1000/- இருந்தது மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்றும், இது குறித்து சொந்தப் பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாக தெரிவித்தார், அதை சாரிபார்க்க அது சரியாக இருந்தது, எனவே அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. உதவியாளர் திரு.B.சீனிவாசன் அவர்களிடம் உள்ள பணத்தை ஆஜர்படுத்த கூறியபோது அவர் அணிந்திருந்த காக்கி நிற வலது பேண்ட்டு பாக்கெட்டில் இருந்த பழுப்புநிற மணிபர்சில் ரூ.6,400/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க, மேற்படி பணம் சொந்தப் பணம் என்றும், அலுவலர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாக தெரிவித்தார், அதை சாரிபார்கக சரியாக இருந்தது, எனவே அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவரது பின்பக்க பேண்ட்

**Kancheepuram V&AC Cr.No.1/AC/208/KM, FIR contents continues for Column 12:**

பாக்கெட்டிலிருந்து ரூ.8320/- (2000X3, 500X4, 100X2, 20X3, 10X6) எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்க உரிய விளக்கம் அளிக்காததால் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி தனிநபர் திரு.M.பிரவீன்குமார் என்பவரிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்யச் சொல்ல அவரது மேல் சட்டைப் பாக்கெட்டில் ரூ.3080/- (500X4, 100X10, 20X2, 10X4) இருந்து எடுத்து ஆஜர் செய்தார், இது பற்றி அவரிடம் விளக்கம் கேட்க, அதற்கு மேற்படி பணம் தான் சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என விளக்கம் அளித்ததால் அந்தப் பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், திரு.வெங்கடேசன் என்பவரிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்யச் சொல்ல அவரது வலதுபுற பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ.1570/- (500X1, 100X10, 50X1, 20X1) எடுத்து ஆஜா் செய்தாா். இது பற்றி அவரிடம் விளக்கம் கேட்க, அது தனது சொந்தப் பணம் என்று தெரிவித்ததால் அந்தப் பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும், திரு.தசரதன் என்பவரிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்யச் சொல்ல அவர் தனது சட்டை மேல் பாக்கெட்டில் இருந்து ரூ.110/- எடுத்து ஆஜர் செய்தார், மேற்படி பணம் குறித்து கேட்க, அவர் உரிய விளக்கம் அளித்ததால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், இன்று பணியில் இருப்பவர்கள் விவரங்களை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்க, அலுவலக உதவியாளர் திரு.நாகப்பன் அவர்கள் அருகில் உள்ள (சுமார் 25 அடி) தகர கூறை வேய்ந்த செட்டில் இருப்பதாக தெரிவித்தார். நான், குழுவினருடன் அருகில் இருந்த மேற்படி செட்டிற்குச் சென்று துணை ஆய்வுக் குழு அலுவலரான நானும் மற்றும் எனது குழுவினரையும் மேற்படி செட்டில் ஓய்விலிருந்த திரு.A.நாகப்பன், ஆ/வ 57, த/பெ ஆறுமுகம், அலுவலக உதவியாளர் எண்.30/49, ரயில்வே ஸ்டேசன்ரோடு, காட்டாங்கொளத்துர், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் என்பவரிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டும், மேலும் எங்கள் உடமைகளை சுயசோதனை செய்து

**Kancheepuram V&AC Cr.No.1/AC/208/KM, FIR contents continues for Column 12:**

காண்பித்து, அவர் தங்கியிருந்த செட்டை சோதனை செய்ததில் செட்டின் நுழைவாயிலுக்கு நேர் எதிரே இருந்த சுமார் 4 அடி உயர நீளவண்ணம் உள்ள சுவற்றிற்கும் அதனை ஒட்டியிருந்த தகர சீட்டிற்கும் இடையில் ரூ.4000/- (500X6, 100X10) சொருகி வைக்கப்பட்டிருந்தது. இது பற்றி அவரிடம் விளக்கம் கேட்க, அதற்கு தகுந்த விளக்கம் அளிக்காததால் அந்தப் பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், அவரிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர்செய்ய கூற அவரும் மேல் சட்டைப் பாக்கெட்டிலிருந்து ரூ.880/- (500X1, 100X2, 50X3, 10X3) எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்க, ஒரு 500 ரூபாய் மற்றும் மூன்று 10 ரூபாய் கரன்சி தாள்கள் தனது சொந்தப் பணம் என்றும் இதற்காக உரிய பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாக தெரிவித்தார். மீதம் இருந்த ரூ.350/- க்கு உரிய விளக்கம் அளிக்கவில்லை. எனவே, ரூ.530/- (500X1, 10X3) அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. விளக்கம் அளிக்காத தொகை ரூ.350/- (100X2, 50X3) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ஆகமொத்தம் ரூ.28,820/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சோதனையின்போது பணப் பதிவேடு ஆய்வு செய்ததில் பக்கம் 125-ல் கையிருப்பு ரூ.7,59,100/- இருந்தது அதில், இன்று காலை வங்கியில் செலுத்தியது போக ஒரு சதவிகித பணம் ரூ.7,630/- மட்டும் வங்கியில் செலுத்தப்படாமல் இருந்தது. அந்தப் பணம் பற்றி கேட்க அது பீரோவில் இருந்த லாக்கரில் இருந்து எடுத்து ஆஜர் செய்ய, சரிபார்க்க சரியாக இருந்தது, மேற்படி பணத்தை திருமதி.G.ஜெயமேகலா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பணப்பதிவேட்டை பார்வையிட்டு அதில் நான் கையொப்பமிட்டு, பிறகு அதன் நகலை எடுத்து, நான் அத்தாட்சி செய்து, ஆஜரில் இருந்த திருமதி.G.ஜெயமேகலா மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடமும் அத்தாட்சி பெற்று, மேற்படி நகலினை பெறப்பட்டது. வருகைப் பதிவேட்டை ஆய்வு செய்ததில் இன்று 04.01.2018 திருமதி.G.ஜெயமேகலா, திரு.B.சீனிவாசன், உதவியாளர், திரு.A.நாகப்பன், அலுவலக

**Kancheepuram V&AC Cr.No.1/AC/208/KM, FIR contents continues for Column 12:**

உதவியாளர் ஆகியோர் இன்று பகல் பணி என இருந்தது. அதில் நான் கையொப்பமிட்டு, அதன் நகல் எடுத்து, அதில் நானும் ஆஜரில் இருந்த திருமதி.G.ஜெயமேகலா மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடமும் அத்தாட்சி செய்து மேற்படி நகலினை பெறப்பட்டது. வருகைப்பதிவேட்டின் சுருக்கப்பதிவேட்டை ஆய்வு செய்து கையொப்பமிட்டேன் அதில் 04.01.2018 பகல் பணியில் இருந்தவர்களின் பெயர்கள் குறிக்கப்பட்ட பக்கத்தை நகல் எடுத்து அதில் நான் கையொப்பமிட்டு, அதன் நகல் எடுத்து, அதில் நானும் ஆஜரில் இருந்த திருமதி.G.ஜெயமேகலா மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடமும் அத்தாட்சி செய்து மேற்படி நகலினை பெறப்பட்டது. மேலும், ரசீது எண்.L9377474 மற்றும் ரசீது எண்.L9377620 ஆகியவற்றின் நகல் எடுத்து அதில் நானும், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களும் அத்தாட்சி செய்து பெறப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது ஆஜரிலிருந்த சோதனை சாவடி அலுவலர்கள் மற்றும் அலுவலகத்தில் இருந்த தனிநபர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்யப்பட்டது. அனைத்து நடவடிக்கைகளும் இன்று 04.01.2018-ந்தேதி மாலை 16.30 மணிக்கு துவங்கி, 05.01.2018 தேதி 00.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

(ஒம்/- திருமதி.இரா.லட்சுமி)
காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்
மாவட்ட ஆய்வுக்குழும துணை
அலுவலர் (இருப்பு),
காஞ்சிபுரம்

(ஒம்/- திரு.J.உதயசங்கர்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்புடி கண்காணிப்புத்துறை
சென்னை-நகரப் பிரிவு-5,
சென்னை-16.

(ஒம்/- திரு.T.சிவபாதசேகரன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்புடி கண்காணிப்புப்பிரிவு,
காஞ்சிபுரம்.

(ஒம்/- திரு.V,கணேசன்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்புடி கண்காணிப்புப்பிரிவு,
காஞ்சிபுரம்.

(ஒம்/- திருமதி.D,சிவகாமி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு டி
கண்காணிப்புப்பிரிவு, காஞ்சிபுரம்.

(ஒம்/- திருமதி.A.நீலவேணி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்புடி கண்காணிப்புத்துறை
சென்னை-நகரப் பிரிவு-5,
சென்னை-16.

**Kancheepuram V&AC Cr.No.1/AC/208/KM, FIR contents continues for Column 12:**

The above complaint was received and registered in Kancheepuram V&AC Cr.No.1/AC/2018/KM U/s. 12, 13(2) R/w.13(1)(d) of the Prevention of Corruption Act 1988 and U/s.102 Cr.P.C. on 05.01.2018 at 16.30 hrs. (Sd/- xxx Inspector of Police, V&AC, Kancheepuram).

The original FIR, along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, Statements of Accused, Cash Rs.28,820/- (Rupees Twenty Eight Thousand Eight Hundred and Twenty only) and seized attested copy of registers maintained at the office of the check post at the time of surprise check are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and the other copies are forwarded to Superior Officers concerned.

05/01/18.

**(D.SIVAGAMI)**
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Kancheepuram.